



எழுதியவர்: மைக்கேல் காலின்ஸ்
தமிழாக்கம்: பர்னபாஸ் சார்லஸ்

# மனிதனின் மாபெரும் பயத்தை மேற்கொள்ளுதல்

மனிதனின் மிகப்பெரிய பயம் எது என்று உங்களிடம் கேட்டால், மரண பயம்தான் என்று தயங்காமல் சொல்லுவீர்கள். மேலும் படிப்பதற்கு முன்பு "மரணம்" என்றால் என்ன என்று பார்ப்போம். நம்மில் அனேகர் மரணத்தை உலக வாழ்க்கைக்கு ஒரு முடிவு என்றே நினைக்கிறோம். ஆனால் அதுமட்டும் அற்த்தமாகாது. மனிதன் சரீரத்தில் வாழ்பவன் மட்டுமல்ல, அந்த சரீரத்திற்குள் ஒரு ஆத்துமாவும் இருக்கிறது. மரணத்தை மேலும் புரிந்து கொள்ள, பூமியில் மனிதன் வாழத் தொடங்கிய காலத்திற்குப் போய் பார்க்க வேண்டும்.

இந்த உலகம் தானாக பரிணாமம் அடையவில்லை, ஒன்றுமே இல்லாதபோது

தேவனின் வார்த்தையால் உருவாக்கப்பட்டது என்பதை முதலாவது நம் மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். தம் வாயால் அவர் சொல்லச்சொல்ல ஒவ்வொன்றாக உருவானது. நம்புவதற்கு கடினமாக தோன்றினாலும், அதுவே மறுக்கமுடியாத உண்மை. தேவனைக்குறித்து சொல்ல வேண்டுமானால், அவர் அன்பிற்கு அளவே இல்லை, சாந்தம், பொருமை, பண்பு, வல்லமை, நீதி, தூய்மை, உண்மை, நற்குணம், சமாதானத்தை விரும்புபவர், மன்னிப்பவர், நீடிய சாந்தமுள்ளவர், கருணை, இரக்கம், கனிவு, சந்தோஷம் போன்ற நாம் விரும்பும் அத்துனை நற்குணங்களையும் கொண்டவர் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

## தேவனின் சாயலாய் படைக்கப்படுதல்

பள்ளாயிரமாண்டுகளுக்கு முன்பு தேவன் ஆறே நாட்களில் இந்த உலகத்தை சிருஷ்டித்தார், முதல் மனிதர்களாகிய

ஆதாமையும் ஏவாளையும் ஆறாம் நாளில் சிருஷ்டித்த பின் ஏழாம் நாளில் தேவன் ஓய்ந்திருந்தார். தேவன் அவர்கள் இருவரையும் அவருடைய சாயலின்படி உண்டாக்கினார், தேவன் ஆவியாக இருக்கிறார் ஆதலால் இது அவரது உருவ ஒற்றுமையை குறிக்காமல் அவரது குணாதிசயங்களை குறிக்கிறது. *"பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிக்-ளையும் ஆளக்கடவர்கள் என்றார். 27. தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.* **ஆதியாகமம்-1:26,27** இதன் பொருள் என்னவென்றால், உருவாக்கப்பட்ட முதல் ஆணும் பெண்ணும் தேவனின் குணாதிசயங்களைப் பெற்றிருந்தனர். அவர்களுக்குள் அன்பு,

மகிழ்ச்சி, சமாதானம், பொருமை, கனிவு, நற்குணம், உண்மை, தயவு, சுயக்கட்டுப்-
-பாடு இன்னும் தேவனிடம் இருந்த எல்லா குணாதிசயங்களும் காணப்பட்டன.

## ஆத்துமாவோடும் சரீரத்தோடும் சிருஷ்டிக்கப்பட்டோம்

நாம் ஒரு சரீரத்தோடும் ஆத்துமாவோடும் சிருஷ்டிக்கப்பட்டுள்ளோம். மனிதனின் சரீரத்தை மண்ணினாலே உண்டாக்கி அதன் மூக்கினுள் தன் சுவாசத்தை ஊதி உயிர் கொடுத்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான். ஆதியாகமம்- 2:7
இதன் பொருள் என்னவென்றால் தேவன் நித்தியமாய் இருப்பதுபோலவே நாமும் என்றென்றும் வாழும்படி உண்டாக்கப்பட்-
-டோம். ஆனால் ஏதோ ஒன்று மாறியதால் இப்படி நடப்பதை தடுத்துவிட்டது. (நடந்ததை கண்டுபிடிக்க தொடர்ந்து படியுங்கள்)

## அனுமதியும் தடையுத்தரவும்

தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் அளவற்ற விடுதலையும் எச்சரிப்புடன் இணைந்த ஒரே ஒரு தடையும் அளித்திருந்தார். *தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்தில் உள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்-*
*-தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.* **ஆதியாகமம் 2:16,17**

## மரணம்

"மரணம்" என்ற வார்த்தையை கேட்டதும், பொதுவாக நாம் சரீர மரணத்தையே யோசிக்கிறோம். ஆனால் நாம் உடலும் ஆத்துமாவும் கொண்ட சரீரத்திலுள்ளவர்-
-கள் மட்டுமல்லாமல் ஆவிக்குறியவர்க-
-ளும்கூட, எனவே சாவு நம் சரீரம் மற்றும் ஆத்துமாவை சிதைக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. ஆதலால் ஆதாமும் ஏவாளும் பாவம் செய்த உடனே அவர்கள் ஆவியிலே மரித்துப்போனார்கள்.

எப்படி என்றால் அவர்களுக்குள் இருந்த தேவ சாயல் முழுவதும் சிதைந்து போய், தேவனின் அழகான குணாதிசயங்கள் வெளிப்படாமல் போனது. அவர்கள் ஆவி--யில் மரித்தது மட்டுமல்லாமல் சரீரமும் சாவுக்கேதுவாக நாளுக்கு நாள் பெலவீ--னப்பட்டது. இருந்தாலும் நமது வாழ்நாட்--களைவிட அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் நீண்ட நெடிய நாட்கள் வாழ்ந்துள்ளனர். மெத்தூசலா அதிக நாட்கள் வாழ்ந்தவன். *மெத்தூசலாவுடைய நாளெல்லாம் தொளாயிரத்து அறுபத்தொன்பது வருஷம்; அவன் மரித்தான்.* **ஆதியாகமம் 5:27**

## மனிதனின் வீழ்ச்சி

தேவனுக்கு விரோதமாக செய்வது அவர்களுக்குள் பாவத்தையும் மரணத்தை-யும் கொண்டுவரும் என்று ஆதாம் ஏவாள் அறிந்திருந்தும் பாவத்தை தெரிந்து கொண்டனர். அன்று முதல், தேவனுக்கு பிரியமான வாழ்க்கையை மனிதன் வாழ விரும்பினாலும், அவனது முயற்சிகள் ஒன்றும் அவரை பிரியப்படுத்தவில்லை. பாவம் உலகலாவிய மக்களை ஆட்சி

செய்ய ஆரம்பித்தது (அது இன்றும் தொடர்கிறது). மனிதன் அப்பாவத்திற்கு அடிமையானதுமின்றி, அதற்கான தண்டனையாகிய மரணத்தையும் தன் கழுத்தில் சுமந்துக்கொண்டு இருக்கிறான்.

இந்த மரணம் தற்காலிகமானதல்ல, இது நிரந்தரமானது, அப்படியானால் மனிதன் தேவனைவிட்டு நித்தியமாக பிரிக்கப்பட்டு பரலோகத்தில் தேவனுக்கு விரோதமாக எழும்பிய சாத்தானுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஏற்படுத்தப்பட்ட நரகத்தில் தள்ளப்படுவான். நம்மை தேவனுக்கு விரோதமாக திசைதிருப்ப சாத்தானும் தன்னாலான எல்லா முயற்சிகளையும் செய்து, தான் சென்றடையும் நரகத்தில் நம்மையும் தள்ளி அழிக்க விரும்புகிறான். இவ்வாறு பாவமும் மரணமும் மக்களின் மீது வந்தது. இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று. **ரோமர்-5:12**

## தேவனின் மீட்பின் திட்டம்

இக்காட்சி சற்று கண்டிப்பானதாக தோன்-
-றினாலும், இதில் ஒரு நற்செய்தியும் காத்-
-திருக்கிறது. மனிதன் தேவனுக்கு விரோ-
-தமாக மாறினாலும், அன்பும் ஞானமும்
உள்ள தேவன் நம்மை பாவத்தின் பிடியிலி-
-ருந்தும் அதன் முடிவாகிய நித்திய
மரணத்திலிருந்தும் மீட்பதற்கு அவர் ஒரு
திட்டத்தை வைத்திருந்தார். அத்திட்டத்-
-தை படிப்படியாக வெவ்வேறு காலங்களில்
மக்களுக்கு வெளிப்படுத்தி வந்தார்.
அதில் முதலாவது ஆபிரகாம் என்றவ-
-ருக்கு வெளிப்படுத்தப்பட்டது. அவனும்
அவன் மனைவியும் வயது முதிர்ந்த
காலத்திலும் பிள்ளை பெறுவார்கள் என்ற
தேவனின் வாக்குறுதியை விசுவாசித்தார்-
-கள். அவன் தேவனின் வாக்குத்தத்தத்-
-தை விசுவாசித்தபடியால் தேவன் தமது
நீதியை அவனுக்கு கொடுத்தார். தனது
எந்த நற்கிரியைகளாலோ அல்லது விலை-
-கிரையத்தினாலோ அல்லது தேவனுக்கு
பலிகள் செலுத்தியதாலோ அல்ல.
தேவனே அவனை நீதிமானாக்கினார்.

தேவன் தனக்கு கொடுத்த வாக்குத்தத்--தத்தை அவன் விசுவாசித்தபடியால் தான் அவனை தேவன் நீதிமானக்கினார். இதை மனதில் பதித்துக்கொள்ளுங்கள், பின்பு இதை ஒப்பிடுவோம்.

## தேவனின் ஜனம்

இந்த ஆபிரகாம் யூதேயா தேசத்தின் இஸ்ரவேலருக்கு தகப்பனானான், இவர்--களைத்தான் தேவனும் தம் சொந்த ஜனமாக அழைக்கிறார். பாவத்தின் பிடியிலிருந்தும் அதன் தண்டனையிலி--ருந்தும் மனுக்குலத்தை மீட்டு நமக்கு நித்திய வாழ்வை கொடுக்கும் திட்டத்தை இந்த யூத வம்சத்தின் மூலமாகவே நிறைவேற்ற தேவன் திட்டம் பண்ணினார்.

## கட்டளைகள்

ஆனால் தேவன் இத்திட்டத்தை நிறை--வேற்றுவதற்கு முன்பு வேறு ஒன்றை செய்தார், ஆரம்பத்தில் அதை யூதர்கள் தவறுதலாக புரிந்துகொண்டனர். இரண்டு முக்கியமான விஷயங்களை அவர்கள் உணர்ந்துகொள்ள சில கட்டளைகளை அவர்களுக்கு கொடுத்தார்.

முதலாவது, தேவன் பரிசுத்தத்தில் உன்னதர், நாமோ பாவத்தில் உழள்பவர். இரண்டாவது, தன் சொந்த முயற்சியால் ஒருவராலும் அந்த கட்டளைகளை கைக்கொண்டு பிழைக்க முடியாது.

கட்டளைகள் கொடுக்கப்பட்டது முதல், ஜனங்கள் தங்கள் சொந்த முயற்சியால் அவற்றை நிறைவேற்ற முற்பட்டதும் வீனானது. அவற்றை கைக்கொள்ள எந்த அளவு முயற்சித்தார்களோ அந்த அளவு தேல்வியை கண்டதுதான் மிச்சம். ஏனெனில் அவை மனிதனின் சுய பெலத்தினால் எட்டிப் பிடிக்க முடியாதவை. இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளி--னாலே தேவனுக்கு முன்பாக நீதிமா--னாக்கப்படுவதில்லை. **ரோமர் 3:20**

இது ஒரு கேள்வியை கேட்க வைக்கிறது, இந்த கட்டளைகளால் நம்மில் ஒருவரும் பிழைக்க முடியாதபோது, ஏன் அவற்றை நமக்கு முதலில் கொடுத்தார்?

இந்த கேள்விக்கான பதில் மனிதனாக வந்த தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்டது. அவரே இந்த சட்டங்களை நிறைவேற்றினவர். அது மட்டுமின்றி அவரை விசுவாசிக்கிற எவருக்கும் நித்திய ஜீவனை பரிசாக அளிக்கிறார். ஆபிரகாம் தேவனை விசு--வாசித்ததால் நீதிமானக்கப்பட்டதுபோல, இயேசுவை விசுவாசிக்கிறவர் யாராக இருந்தாலும் தேவனின் நீதியை பெற்று நித்திய வாழ்வை சுதந்தரிக்க முடியும்.

## இயேசு தேவனின் குமாரன்

தேவ குமாரனாகிய இயேசு, மரியாள் என்னப்பட்ட கன்னிகையிடத்தில் அற்புத விதமாக தோன்றி இவ்வுலகில் வந்தார். இயேசுவின் பிறப்பைப்பற்றி காபிரியேல் என்ற தேவதூதன் இவ்வாறு மரியாளிடம் கூறினான்.

பரிசுத்தஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன் மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்--தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது

தேவனுடைய குமாரன் என்னப்படும். **லூக்கா 1:35**

## மிகப்பெரிய தியாகம் (பலி)

இயேசு ஒரு யூத குடும்பத்தில் பிறந்து பிதாவாகிய தேவனுக்கு பிரியமான குற்றமற்ற வாழ்க்கையை வாழ்ந்ததால், அவர் யோவான்ஸ்நானனால் ஞானஸ்--நானம் பெற்றபோது வானம் திறக்கப்பட்டு வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. **மத்தேயு 3:17.** மனிதனிடம் தேவன் எதிர்பார்த்த குற்றமற்ற வாழ்க்கையை இயேசு வாழ்ந்தார் என்று அவர் வாழ்வில் பிரியப்பட்ட தேவன் சந்தேகமின்றி கூறினார். எனவே அவர், அகில உலகத்தின் பாவத்தையும் தன்மீது சுமக்கத்தக்க பூரண புருஷனாக இருக்கிறார்.

## அன்பு, கிருபை, இரக்கம் மற்றும் தேவநீதி

தேவனின் நிபந்தனையற்ற அன்பை நிரூபிக்க இயேசு வந்தார். அவரது அன்பு, நாம் யார் அல்லது எப்படி வாழ்கிறோம் என்பதை சார்ந்திராமல், அவரின் படைப்பாகிய நம்மை பூரணமாக நேசிக்கும் அன்பு. தேவனின் கிருபையை நிரூபிக்க அவர் வந்தார். அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினா--லும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. **யோவான் 1:14.** கிருபை என்பது "தகுதியில்லாதவனுக்கு காட்டும் தயவு". (நமது பாவத்தினிமித்தம்) தகுதியற்ற நாம் தேவனின் அன்பையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வது. தேவனின் இரக்கத்தையும் நிரூபிக்க இயேசு வந்தார், எப்படி என்றால், (நமது பாவத்தினிமித்தம்) பெறவேண்டிய தண்ட--னையை நாம் பெறாமல் தவிர்ப்பது.

இயேசு தேவநீதியையும் நிரூபித்தார், எப்படியெனில் அகில உலகத்தின் பாவத்--தையும் தன்மேல் ஏற்ற இயேசுவை தண்டிப்பதன் மூலம் தேவன் பாவத்தை (பொறுத்துக்கொள்ளாமல்) கண்டித்தார். எனவே தேவன் நீதியுள்ளவரும் நீதிமா--னாக்குகிறவருமாய் (ஜனங்களை குற்ற மற்றவராக அல்லது நீதியுள்ளவராக மாற்றத்தக்கவர்) இருக்கிறார். . .தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்--கொண்டதைக் குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்--தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதி--மானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், **ரோமர் 3:25,26.**

அகில உலகத்தின் பாவங்களுக்காக தன் ஜீவனை பலியாக ஒப்புக்கொடுப்பதன் மூலம் நிறைவேற்றினார்.

எப்படிஎனில் நமது பாவங்களின் தண்ட-
-னையாகிய மரணத்தை நாம் பெருவதற்கு பதிலாக, நமது ஸ்தானத்தில் இயேசு மரித்ததனால் நாம் அந்த தண்டனைக்குத் தப்பி மாறாக நித்திய ஜீவனை பெற்றுக்-
-கொள்ளலாம். **யோவான் 3:16-ல்** இயேசு சொன்னார், தேவன், தம்முடைய ஒரே-
-பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

அந்த ரோமானிய சிலுவையில் கொடூர மரணமடைந்ததுமின்றி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததனால், நம் சார்பில் பலியான அவரது தியாகம் தேவனால் அங்கீகரிக்கப்பட்டது நிரூபனமாகிறது.

## தேவனின் நீதி

நமது ஸ்தானத்தில் இயேசு மரித்ததனா-
-லும் மீண்டும் உயிர்த்தெழுந்ததாலும், நமது பாவங்களுக்கான தண்டனையை

சுமந்ததுமின்றி தம்மை விசுவாசிக்கின்ற யாவருக்கும் தேவ நீதியை பரிசாக அளிக்கிறார். இப்படியிருக்க, நியாயப்--பிரமாணமில்லாமல் தேவநீதி வெளி--யாக்கப்பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்--களும் சாட்சியிடுகிறது. அது இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமேஇல்லை. **ரோமர் 3:21-22.**

தேவனின் பார்வையில் எந்த மனுஷனும் நீதிமான் இல்லை, ஏனெனில் தேவன் பரிசுத்தர், அவரது பரிசுத்தத்தோடு நம்மை ஒப்பிட்டால் தொலைதுரத்தில் இருக்கி--றோம். ஆனால் முற்றிலும் நீதியுள்ள இயேசு, தேவனின் நீதியையே பரிசாக கொடுக்கும் அதிகாரம் பெற்றவர். நீதிமானாக்கப்பட நாம் எந்த பரிகாரமும் செய்யத் தேவையில்லை. ஆபிரகாம் எப்படி தேவனை விசுவாசித்து தேவனாலே நீதிமானாக்கப்பட்டானோ, அதேபோல் நாமும் தேவனை விசுவாசித்தால் போதும்.

## அதனால் நமக்கென்ன பலன்?

இன்று உங்களுக்கும் எனக்கும் இதை எவ்வாறு அர்த்தப்படுத்தலாம்? எப்படி எனில், இயேசு உங்கள் ஸ்தானத்தில் மரித்து உயிர்த்தெழுந்ததை விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றால், உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நித்திய மரணத்துக்கு தப்பி, தேவநீதியை பரிசாகப் பெற்று, பூமியிலேயே புதுவாழ்வை பெற்று, முடிவில் தேவனோடு பரலோகத்தில் நித்திய காலம் வாழலாம். இதனால் நாம் சரீரத்தில் மரிக்கமாட்டோம் என்று பொருளாகாது, நமது ஆத்துமா மரிக்காத நித்திய நிலையை அடைந்தது என்றே பொருள். ஆண்டவர் இயேசு மறுபடியும் வரும்முன் இந்த நமது சரீரம் மரித்தாலும், பின்பு ஒரு புதிதும் மகிமையுமான சரீரத்தை பெற்றுக்கொள்வோம்.

இதோ, ஒரு இரகசியத்தை உங்க-
-ளுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லா-
-ரும் நித்தியரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்-
-கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும்

மறுரூபமாக்கப்படுவோம். 52. எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்--கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். 53. அழிவுள்ளதாகிய இது அழியாமை--யையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ள வேண்டும். **1 கொரிந்தியர் 15:51-53**

## ஞானஸ்நானம் என்றால் என்ன?

"Baptizo" என்ற கிரேக்க வார்த்தையி--லிருந்து "BAPTISM" என்ற ஆங்கில வார்த்தை வருகிறது, இதன் பொருள் "மூழ்கச்செய்தல்". இயேசுவை விசுவா--சிப்பவர் யாராக இருந்தாலும் இந்த எளிய அற்பணிப்பின் செயலை செய்ய வேண்--டும். ஞானஸ்நானத்தில் நாம் இயேசுவின் மரணம், அடக்கம் செய்தல் மற்றும் அவரது உயிர்த்தெழுதலோடு அடையா--ளப்படுத்தப்படுகிறோம். இயேசு நம் ஸ்தானத்தில் மரித்து, அடக்கம்பண்ணப்--பட்டு உயிர்த்தெழுந்ததை அங்கீகரித்து, அதேபோல தண்ணீருக்குள் மூழ்கச் செய்வதன் மூலமும் தண்ணீரிலிருந்து

எழும்புவதன் மூலமும் நாமும் பழைய பாவ வாழ்க்கைக்கு மரித்து, கிறிஸ்துவுக்குள்-ளான புதிய வாழ்க்கைக்கு எழுந்துள்-ளோம் என்று விசுவாசிப்பதாகும்.

இயேசு சொன்னார், விசுவாசமுள்ளவ-னாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவ-னோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்-படுவான். **மாற்கு 16:16.** இயேசுவின் விசுவாசி ஒவ்வொருவரும் இரட்சிக்கப்பட ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்-டியது தெளிவாகிறது.

## ஒரு பரிசு

இந்த பரிசாகிய நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ள நாம் எதுவும் செய்ய வேண்டியதில்லை, இயேசுவை மட்டும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றால் போதும். அதனால் தான் இது ஒரு பரிசு, நமது சம்பளம் அல்ல. (நமது பாவத்தினி-மித்தம் நாம் சம்பாதித்த ஒன்று மரணம் தான்) பாவத்தின் சம்பளம் மரணம்;

தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன். **ரோமர் 6:23.**

## தனிப்பட்ட உதவியாளர்

நாம் தேவநீதியையும் நித்திய ஜீவனையும் பரிசாக பெற்றுக்கொள்வதுமின்றி நமது புதிய வாழ்க்கையை தேவனுக்கு பிரியமாக வாழ்வதற்கு இன்னும் ஒரு பரிசையும் பெறுகிறோம். இந்த புதிய வாழ்க்கையில் நமக்குள் தங்கி, நம்மை வழிநடத்துவதற்கு தேவன் தமது பரிசுத்த ஆவியானவரை தருகிறார். தேவன் பரிசுத்தராயிருக்கிறது போல, அவர் நம்மையும் பரிசுத்தமாக்குகி--றார். சத்தியஆவியாகிய அவர் வரும்--போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்மு--டைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். **யோவான் 16:13**

முன்பு நல்வாழ்வு வாழவேண்டும் என்ற விருப்பம் நமக்கு இருந்திருக்கலாம், ஆனால் அதற்கான ஆற்றல் போதவில்--லை. ஆனால் இப்போது தேவனுக்கு பிரியமான புதுவாழ்வு வாழ்வதற்கான விருப்பமும் ஆற்றலும் பெறுகிறோம்.

**பிலிப்பியர் 2:13-ல்** அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார், ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். மேலும், இயேசுவை விசுவாசிக்கும் நமக்--காக தேவன் வாக்களித்த நித்திய வாழ்--வுக்கு பரிசுத்த ஆவியானவரே உத்திரவா-தமாக அல்லது அச்சாரமாக இருக்கிறார். மீண்டும் அவர் **எபேசியர் 1:13,14-ல்** கூறுகிறார், நீங்களும் உங்கள் இரட்சிப்-பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்--தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்த--ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள். அவருக்குச் சொந்த மானவர்கள் அவருடைய மகிமைக்கு-

புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்ப-
-தற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்-
தரத்தின் அச்சாரமாயிருக்கிறார். அப்படி
யானால் தேவன் தமது பரிசுத்த ஆவியா-
-னவரை நமக்குள் தங்கி வசிக்கும்படி
கொடுப்பார். அதனால் இயேசு வரும்
போது நித்திய வாழ்வு நமக்காகக் காத்தி-
-ருப்பதை நிச்சயித்துக்கொள்கிறோம்.

மரணத்தைக் குறித்த பயத்தோடே நாம்
இதுவரை வாழ்ந்து கொண்டிருந்தாலும்,
தம் உயிர்த்தெழுதலின் மூலம் மரணத்தை
ஜெயித்த இயேசுவை நாம் விசுவாசிப்ப-
-பதன் மூலமே இதை மாற்றலாம். அவர்
மறுபடியும் வரும்பொழுது நாமும் கூட
உயிர்த்தெழுவோம் என்ற உறுதியான
நம்பிக்கையை இப்போது தருகிறார்.
ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும்
இரத்தத்தையும் உடையவர்களாயி-
-ருக்க அவரும் அவர்களைப்போல
மாம்சத்தையும் இரத்தத்தையும் உடை-
-யவரானார்; மரணத்துக்கு அதிகாரியா-
-கிய பிசாசானவனைத் தமது மரணத்-
-தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகால

-மெல்லாம் மரண பயத்தினாலே அடி-
-மைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவ-
-ரையும் விடுதலைபண்ணும்படிக்கும்
அப்படியானார். **எபிரேயர் 2:14,15.**

எனவே நமக்கு மரணம் நேரிட்டாலும் அதைக்குறித்து நாம் பயப்படத் தேவை-யில்லை, ஏனெனில் இயேசு உயிர்த்-தெழுந்தது போல நாமும் அவர் வரும்-பொழுது உயிர்த்தெழுவோம் என்று அறிந்திருக்கிறோம்.

அவர் வருகை மிகசமீபம். அவர் வருவதற்கு முன் உலகத்தில் மகா உபத்திரவம் நேரிடும் என்று இயேசு முன்னறிவித்திருந்தார்.

உபத்திரவங்களுக்கு முன் அவர் வருகைக்கு சில அடையாளங்களும் தோன்றும். இந்த அடையாளங்கள் உண்மையாகவே நம் கண்களுக்கு முன் ஒவ்வொரு நாளும் நடைபெறுகிறது. மத்தேயு 24:7,8-ல் இயேசு சொன்னார், ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும்,

ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளை--நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். இவைக-ளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்.

## தெய்வீக அழைப்பு

இந்த பூமியிலேயே புது வாழ்வை பெறுவதற்கு அவருடைய குமாரன் இயேசுவை விசுவாசிக்கும்படி தேவன் தாமே உங்களை அழைக்கிறார். அவருடைய சாயலுக்கு அல்லது குணாதிசயங்களுக்கு ஒப்பாக உருமாற்றி பின் அவரோடுகூட நித்திய காலமாக பரலோகத்தில் வாழ்ந்திட அழைக்கிறார். இயேசுவை பின்பற்றும் இந்த தீர்மானத்--தைக் குறித்து நீங்கள் ஒருநாளும் வருத்தப்பட மாட்டீர்கள்.

இன்னும் தாமதிக்க வேண்டாம், இப்பொழுதே இந்த அழைப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ளலாம். நீங்கள் இருக்கிற இடத்தில், விரும்பிய எந்த மொழியிலும்

இப்பொழுதே தேவனோடு பேசலாம். அவர் செவிகொடுப்பார். உங்கள் பாவத்--திற்கான தண்டனையை அவர் சுமந்து தீர்த்தார் என்பதை விசுவாசிப்பதாக அவரி-டம் கூறி, உங்கள் பாவங்களை மன்னிக்--கும்படி வேண்டுங்கள். நீங்கள் எந்த பாவம் செய்திருந்தாலும், அவற்றை அவர் முற்றிலும் மன்னிப்பதற்கு ஆற்றலும் விருப்-பமும் உள்ளவர். பின்பு நீங்கள் தேவநீதி--யையே பரிசாக பெற்றுக்கொள்வீர்கள்.

உங்கள் வாழ்கையில் அவருக்கு இடம் கொடுங்கள், அப்பொழுது அவர் உங்களுக்குள் தங்கும் பரிசுத்த ஆவியானவரை கொடுப்பார். உடனடியாக நீங்கள் குற்ற உணர்வுக்கு விடுபட்டு மன்னிப்பை அனுபவிப்பீர்கள்.

விவரிக்க முடியாத சமாதானத்தையும் உலகம் தரமுடியாத சந்தோஷத்தையும் பெற்றால், வாழ்கை முற்றிலும் மாறிவிடும். **யோவான் 14:27-ல்** இயேசு சொன்னார், சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்-

-போகிறேன், என்னுடைய சமாதானத்-
-தையே உங்களுக்குக்கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்
-படாமலும் இருப்பதாக. ஏசாயா என்ற தீர்க்கதரிசியின் மூலம் **ஏசாயா 1:18-ல்** தேவன் சொன்னார், வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகி-
-றார்; உங்கள் பாவங்கள் சிவேரென்-
-றிருந்தாலும் உறைந்த மழையைப்-
-போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச்சிவப்பாயிருந்தாலும் பஞ்-
-சைப்போலாகும்.

இதுமட்டுமல்ல, நீங்கள் தேவனுடைய பிள்ளையாக மாறிவிடுகிறீர்கள் - இதை கற்பனை செய்து பாருங்கள். பேரண்டத்-
-தின் கடவுள் உங்கள் தகப்பனாகிறார். உலகத்தின் எந்த ஒரு தகப்பனையும்விட தேவன் உங்களுக்கு நெருக்கமானவராகி-
-விடுகிறார்.

அவருடைய நாமத்தின்மேல் விசுவாச-
-முள்ளவர்களாய் அவரை ஏற்றுக்-

-கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள் -ளைகளாகும்படி, அவர்களுக்கு அதி- -காரங்கொடுத்தார். **யோவான் 1:12**

உங்களை லௌகீக மரணத்திலிருந்து இரட்சித்து நித்திய ஜீவனை கொடுப்ப- -தற்காக இயேசு என்ன செய்திருக்கிறார் என்பதையெல்லம் வாசித்த நீங்கள் அதை விசுவாசிப்பீர்களானால், இந்த வார்த்தை- -களை ஒரு வழிகாட்டும் குறிப்பாக பயன்படுத்தி நீங்களே ஆண்டவரிடம் ஜெபம் செய்யலாம். நீங்கள் விரும்பியது போல எந்த மொழியிலும் தேவனிடம் ஜெபிக்கலாம், அவரும் செவிகொடுப்பார்.

"தேவனே, நான் செய்த பாவங்களுக்காக, எனக்கு பதிலாக மரிக்கும்படி நீர் உமது குமாரன் இயேசுவை இந்த உலகத்தில் அனுப்பினீர் என்று விசுவாசிக்கிறேன். அவர் எனக்காக மரித்து, உயிர்த்தெழுந்து, பரலேகத்திற்கு வந்துள்ளார் என்பதை விசுவாசிக்கிறேன். அங்கிருந்து அவர்

திரும்ப வந்து என்னை உம்மிடம் கொண்டு செல்வார் என நம்புகிறேன். உமக்கு விரோதமாக நான் செய்த எல்லா பாவங்களுக்காக வருந்துகிறேன், அவற்றை எனக்கு மன்னியும். பரிசுத்த ஆவியின் பெலத்தோடு ஒரு புதுவாழ்--கையை நான் வாழ விரும்புகிறேன். என் வாழ்க்கையை முழுவதுமாக உமக்கு அர்ப்பணிக்கிறேன், என் எஞ்சிய நாட்கள் உம்மால் வழிநடத்தப்பட விரும்புகிறேன். உம்முடைய குமாரன் இயேசுவின் நாமத்--தில் இந்த ஜெபத்தை ஏறெடுக்கிறேன், ஆமென்."

மேலே உள்ள ஜெபத்தை நீங்கள் செய்திருந்தால் (அல்லது உங்கள் சொந்த வார்த்தைகளால் ஜெபித்திருந்தால்), இப்போது நீங்கள் ஒரு புது மனிதன். உங்கள் பழைய மனுஷன் களையப்பட்டு தேவனுடைய பரிசுத்த ஆவியானவரின் பெலத்தோடு ஒரு புதிய வாழ்கையை தொடங்குகிறீர்கள். **2கொரிந்தியர் 5:17-ல்** அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னார், இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்-

-குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்-
-கிறான்; பழையவைகள் ஒழிந்து-
-போயின, எல்லாம் புதிதாயின.

உங்களுக்குள் வாசமாயிருக்கிற தேவனு-
-டைய பரிசுத்த ஆவியானவரால் நீங்கள் வழி நடத்தப்படுகிறபடியால் நித்திய ஜீவனை பெற்ற உறுதியுடன் வாழலாம். **கலாத்தியர் 5:16,17-ல்** அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார், பின்னும் நான் சொல்-
-லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்ற
-படி நடந்துகொள்ளுங்கள், அப்பொ-
-ழுது மாம்ச இச்சையை நிறைவேற்றா-
-திருப்பீர்கள். மாம்சம் ஆவிக்கு விரோ
-தமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோ
-தமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்
யவேண்டுமென்றிருக்கிறவைகளைச்
செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்-
-கொன்று விரோதமாயிருக்கிறது.

**திருச்சபையில் இணைந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்**

நீங்கள் செய்யவேண்டிய முதல் வேலை

ஒரு திருச்சபையை தெரிந்தெடுத்து ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். இயேசு பரமேறுவதற்கு முன், திருச்சபையை ஸ்தாபித்தார். திருச்சபை என்பது ஒரு கட்டிடமல்ல, அது இயேசுவை பின்பற்று--பவர்களின் கூடுகை. **மத்தேயு 18:20-ல்** இயேசு கூறுகிறார், ஏனெனில், இரண்டு--பேராவது மூன்றுபேராவது என் நாமத்--தினாலே எங்கே கூடியிருக்கிறார்--களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்.

விசுவாசிகள் கூடி வருகின்ற போது பல காரியங்கள் சம்பவிக்கிறது, தேவனின் தன்மைகளையெல்லம் கண்டறிகிறோம், நல்ல கிறிஸ்தவ உறவில் வளருகிறோம், ஒருவரை ஒருவர் ஊக்குவிக்கிறோம், தேவையில் ஒருவருக்கொருவர் உதவி செய்கிறோம், வேத வசனத்தை கேட்பத--னால் நம் விசுவாசத்தில் பெலப்படுகி--றோம், பரிசுத்த நற்கருணையில் ஏகோ--பித்து பங்கேற்கிறோம், ஒருவருக்காக ஒருவார் வேண்டுதல் செய்கிறோம், தனி--மையை தவிர்கிறோம் இப்படி பல நன்மை களுண்டு. எனவே தாமதிக்க வேண்டாம்,

உடனே உங்கள் அருகிலுள்ள திருச்சபை--யை நாடி ஞானஸ்நானம் பெற்றால் மற்ற கிறிஸ்துவின் விசுவாசிகளுடன் ஐக்கியம் கொள்ளலாம். உங்கள் வாழ்கையில் தேவன் கொண்டுவரும் மாற்றங்களை நீங்கள் பார்க்கலாம்.

## மரணத்தைக் குறித்த பயம் இனி தேவையில்லை

நித்தியவாழ்வு உங்களுக்கு உண்டு என்ற நம்பிக்கை இருந்தால், மரணத்தைக் குறித்த பயமே இனி தேவையில்லை என்பதை பாருங்கள். இவ்வுலகில் நீங்கள் தேவனின் குணாதிசயங்களை மேலும் பிரதிபலித்து வாழும் வாழ்கை எத்தனை அழகுள்ளது. மண்ணுலகில் நம் உயிர் பிரிந்தாலும், ஆண்டவர் இயேசு திரும்ப வரும்போது, தேவனின் பிரசன்னத்தில் நித்திய காலமாக வாழலாம்.

தேவனோடும் தேவஜனங்களோடும் நாம் தொடங்கும் இந்த புதிய உறவுமுறையை ஆண்டவர் மிகுதியாக ஆசீர்வதிப்பாராக.

வாழ்கை, மரணம் இன்னும் மரித்தபின் உள்ள வாழ்கை இவற்றைக் குறித்து அடிக்கடி நமக்குநாமே கேள்வி கேட்பதுண்டு. அப்படிப்பட்ட இன்னும் பல கேள்விகளுக்கு இச்சிறுநூல் பதிலளிக்க நாடியுள்ளது.

இச்சிறுநூலை படிப்பதனால் நீங்களும் உங்களைச் சார்ந்தவர்களும் நம்பமுடியாத அளவு மறுமலர்ச்சியை அனுபவித்து ஒரு புது வாழ்வை வாழ வாய்ப்பளிக்கிறது.

இந்த சிறுநூல் மூலம் நீங்கள் பலன் அடைந்திருப்பீர்களெனில், அதை மற்றவர்-களிடம் பகிர்ந்துகொள்ளுங்கள்.

(இச்சிறுநூலுக்கு பதிப்புரிமை இல்லை. உங்கள் விருப்பம் போல் இதை அச்சிடவோ, நகல் எடுக்கவோ, மொழிபெயர்கவோ அல்லது மற்றவர்ளுக்கு பகிரவோ தயங்காதீர்கள்).